DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -2

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ஜெயந்தி | Caste: |
| Father's Name: | திரு. தர்மலிங்கம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 2nd day of January -2024.

**A1 , A2, A5, A7 to A9, A11, A13 to A18 present. A3 produced. A6 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம், வங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். இறந்துபோன தர்மலிங்கம் எனது கணவர். அ.சா.1 எனது கொழுந்தனார். இவ்வழக்கில் எனது கணவர் தர்மலிங்கம் நீங்கலாக சுரேஷ், மகாலிங்கம், காசிநாதன், பிரபு ஆகியோர் இறந்துவிட்டார்கள். காசிநாதன் எனது மாமனார். இறந்த சுரேஷ், மகாலிங்கம், பிரபு ஆகியோர் எனது கணவரின் தம்பிகள். ஆஜர் எதிரிகளை தெரியும்.

அவர்கள் எனது கிராமத்தில் தான் வசிக்கிறார்கள். 16.05.2008 அன்று வெள்ளிகிழமை காலை 9.00 மணியளவில் ராஜலிங்கம், மகாலிங்கம், சுரேஷ், பிரபு, அமிர்தலிங்கம் ஆகியோர் வண்ணாங்குளத்திற்கு குளிப்பதற்காக சென்றார்கள். அன்று காலை 9.30 மணியளவில் அவர்கள் குளித்துவிட்டு திரும்ப வந்தார்கள். அன்று நான் காலையில் வண்ணாங்குளத்திற்கு அருகிலுள்ள இடத்திற்கு இயற்கை உபாதை

கழிப்பதற்காக போய்இருந்தேன். மேற்கண்ட நபர்கள் குளித்துவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்த சமயத்தில் நானும் இயற்கைஉபாதையை கழித்துவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தேன். அப்போது பாலுசாமி என்பவரது வீட்டிற்கு அருகில் எதிரிகள் திருஞானம், ரவிசந்திரன், காளிதாசன், ரமேஷ், சுரேஷ், பிரபாகரன், பழனிசாமி, தினேஷ், ராஜதுரை ஆகியோர் பதுங்கியிருந்தார்கள். சுமார் 16 பேர் பதுங்கி இருந்தார்கள்.

அப்போது இவர்களை விடகூடாது பிடித்து வெட்டுங்கடா காசிநாதன் குடும்பத்தை அழித்துவிடவேண்டும் என்று திருஞானம் சத்தம் போட்டார். எதிரி சசிகலா அந்த குடும்பத்தில் ஒருவர் கூட இருக்ககூடாது பிடித்து வெட்டுங்கடா என்று சத்தம் போட்டார். இறந்த 5 பேர் கையிலும் எந்த ஆயுதங்களும் இல்லை. எதிரிகள் தங்களது கைகளில் வீச்சருவாளும், பட்டாகத்தியும் வைத்திருந்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆயுதங்களைதான் வைத்திருந்தார்கள்.

எதிரிகள் திருஞானமும், ரவிசந்திரனும் சுரேசை முதலில் வெட்டினார்கள். எதிரிகள் பிரபாகரனும், பழனிசாமியும் பிரபுவை வெட்டினார்கள். எதிரிகள் ராஜதுரையும், தினேசும் மகாலிங்கத்தை விரட்டி சென்று வெட்டினார்கள். எதிரிகள் பாஸ்கரனும், ரமேசும்(த.பெ.சக்திவேல்) எனது கணவர் தர்மலிங்கத்தை வெட்டினார்கள். எதிரி காளிதாசன் எனது கணவரின் மார்பில் ஏறி உட்கார்ந்துகொண்டார். எதிரி பாஸ்கரன் எனது கணவரின் காலில் வெட்டினார். எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவர் எனது கணவரின் கழுத்தில் வெட்டினார்.

எதிரி ரமேஷ்,த.பெ.சக்திவேல் எனது கணவரின் தலையை தனியாக துண்டித்து எடுத்து அதனை எடுத்துசென்று காளியம்மன்கோவிலில் சூலத்தில் குத்திவைத்துவிட்டார். அந்த கோவில் எனது வீட்டிற்கு மேற்குபுறம் இருக்கிறது.

எனது மாமனார் காசிநாதன் எதிரிகளை தடுக்க வந்து கையெடுத்து கும்பிட்டு என் மகன்களில் யாரையாவது ஒருவரையாவது உயிரோடு விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினார். எதிரிகள் எனது மாமனாரையும் வெட்டிவிட்டார்கள். என் மாமனார் இறந்துவிட்டார். என் மாமியார் ஜானகி என்பவரையும் எதிரிகள் தலையிலும், கையிலும், கழுத்திலும் வெட்டிவிட்டார்கள்.

எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் பிரபுவை வெட்டினார்கள். பிரபுவின் தலையை தனியாக துண்டித்துவிட்டார்கள். எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் பிரபுவின் தலையை காலால் உதைத்து காளியம்மன்கோவிலின் பின்புறம் போட்டுவிட்டார்கள். பின்னர் போலிசார் வந்துவிட்டார்கள். போலிசார் வந்து காயமடைந்திருந்த என் மாமியாரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.

இறந்தவர்களின் உடல்களை மருத்துவமனைக்கு கொண்டுபோய்விட்டார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நாங்கள் கூட்டு குடும்பமாகத்தான் இருந்துவந்தோம். எனது கணவர் விவசாயம் தான் செய்து வந்தார். கூலிக்குதான் சென்றுவந்தார். என் மாமனாருக்கு சொந்தமாக விவசாய நிலம் இருந்தது. ஆனாலும் என் கணவர் விவசாய கூலிவேலைக்கு தான் சென்றுவந்தார். நானும் விவசாய கூலிவேலை தான் செய்து வந்தேன். எங்கள் ஊரில் நிறைய பெண்கள் விவசாய கூலிவேலைக்கு தான் சென்றுவந்தார்கள் என்றால் சரிதான்.

காலை 7.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிடுவோம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் தனது 3 குழந்தைகளும் சிறுகுழந்தைகளாக இருந்ததால் அந்த சமயத்தில் தான் வேலைக்கு போகவில்லை என்றும், தற்போது தான் கூலிவேலைக்கு போவதாகவும் சாட்சி சுயமாக கூறுகிறார். நான் கூலிவேலைக்கு செல்லும்போது எனது குழந்தைகளை என் மாமியார் பார்த்துகொள்வார் என்றால் சரிதான். எனது கணவர் படிக்கவில்லை.

எங்கள் குடும்பத்திலேயே அ.சா.1 மட்டும் தான் படித்தவர் என்றால் சரிதான். அவர் வெளியூரில் தான் படித்தார் என்றால் சரிதான். பெரும்பாலும் அவர் வீட்டில் இருக்கமாட்டார் என்றால் சரியல்ல. எங்கள் கூட்டு குடும்பத்தில் என் மாமியார், மாமனார், நான், எனது கணவர் தர்மலிங்கம், கொழுந்தனார் ராஜலிங்கம், அமிர்தலிங்கம், மகாலிங்கம் ஆகியோர் உறுப்பினார்கள். எங்களது குடும்பம் கூட்டுகுடும்பம் என்றும், அதில் மேற்கண்ட உறுப்பினர்கள் இருந்தார்கள் என்றும் நான்

போலிசார்விசாரணையில் சொல்லவில்லை என்றால் கூட்டுகுடும்பம் என்று மட்டும் தான் சொன்னேன். உறுப்பினர்களின் பெயர்களை சொல்லவில்லை.

நாங்கள் குடியிருந்த வீட்டில் ஒரு ஹால் மற்றும் இரண்டு அறைகள் இருந்தது. வீட்டிற்கு வெளியே பின்புறமுள்ள கூரைசெட்டில் சமையல்செய்வோம். தனியாக பாத்ரூம் கிடையாது. சம்பவ சமயத்தில் அ.சா.1 கல்லூரியில் வேலைபார்த்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அவர் படித்துகொண்டு இருந்தாரா என்றால் இல்லை. வீட்டில்தான் இருந்தார்.

சம்பவ சமயத்தில் நான் வண்ணாங்குளத்திற்கு பக்கத்திலுள்ள இடத்திற்கு சென்று இயற்கை உபாதையை கழித்துவிட்டு மீண்டும் திரும்ப வந்துகொண்டிருந்ததாக போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். பொதுவாக கிராமத்தில் பெண்கள் கருக்கல்நேரத்தில்தான் கொல்லைக்கு போவார்கள் என்றாலும், காலை 9.00 மணிக்கு நான் கொல்லைக்கு போய்விட்டு வந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

பாலுசாமி வீட்டு சந்து பகுதி என்று நான் சொல்லும் பகுதியின் அகலம் சுமார் 1–1/2 அடி இருக்கும். நான் சொல்லும் அளவுள்ள சந்து பகுதியில் எதிரிகள் அனைவரும் ஒளிந்து நிற்கமுடியாது என்றாலும், நான் போலிசார் மற்றும் அ.சா.1 சொல்லிகொடுத்ததின் பேரில் பொய்சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. அது நீட்டு சந்து என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

என் மாமியாருடன் நான் மருத்துவமனைக்கு போகவில்லை. எனக்கு சிறு குழந்தைகள் இருந்ததால் போகவில்லை என்று சாட்சி சுயமாக கூறுகிறார். சம்பவம் நடந்த அன்றே போலிசார் என்னை விசாரித்தார்கள். அன்றைய தினம் நான் வேலைக்கு போய்விட்டேன் என்றாலும், சம்பவத்தை நான் நேரில்பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் நான் என் மாமியாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பேன் என்றால் சரியல்ல.

என் மாமனாரையும், கணவரையும், கொழுந்தனார்களையும் வேறு யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்றாலும் அ.சா.1 மற்றும் போலிசார் சொல்லிகொடுத்ததின்

அடிப்படையில் நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>8 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் கணவர் எப்படி இறந்தார் என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது என் கணவர் எங்கு இருந்தார் என்றால் வீட்டில்தான் இருந்தார். எதிரிகள் என் கணவரின் தம்பியை தாக்கியதை பார்த்து தான் என் கணவரும் வெளியே சென்று எதிரிகளை பார்த்து எனது தம்பிகளை விட்டுவிடு என்று சொல்லி கையெடுத்து கும்பிட்டதாக சாட்சி சுயமாக கூறுகிறார்.

என் கணவருக்கு காலில் வெட்டுகாயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 8 ஆம் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல. அவர்தான் என் கணவரின் காலில் வெட்டினார் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

வழக்கு சம்பவத்தை நான் பார்த்ததாக பொய்சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

ஜானகி என்பவர் எனது மாமியார். எங்கள் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே 10 வீடுகள் இருக்கிறது. சுமார் 100 அடி தொலைவு இருக்கும். எனது வீட்டிற்கும் வண்ணாங்குளத்திற்கும் இடையே சுமார் 1/2 கி.மீ தொலைவு இருக்கும். சம்பவஇடத்திற்கும் நான் நின்ற இடத்திற்கும் இடையே சுமார் 100 அடி தொலைவு இருக்கும். பிரபு என்பவரை எந்த இடத்தில் வைத்து வெட்டினார்கள் என்றால் பாலுசாமி வீட்டிற்கு அருகில்வைத்து வெட்டினார்கள். பாலுசாமி வீடு இருக்கும் தெருவானது தென்வடல் தெருவாகும்.

பாலுசாமிவீட்டிற்கு எந்த பக்கத்தில் வைத்து வெட்டினார்கள் என்றால் பாலுசாமி வீட்டிற்கு எதிர்புறம் தென்வடல் ரோடு இருக்கிறது. அந்த ரோட்டில் வைத்து தான் வெட்டினார்கள். சுரேசையும் அந்த இடத்தில் வைத்து தான் வெட்டினார்கள். வெட்டிய

இடத்தில் தான் இருவரது பிரேதங்களும் கிடந்தது. மற்ற மூவரையும் எங்கு வைத்து வெட்டினார்கள் என்றால் எனது வீட்டிற்கு எதிர்புறம் வைத்து வெட்டினார்கள். எனது வீடு என்று நான் சொல்வது தான் என் மாமனார் காசிநாதனின் வீடாகும்.

என் கணவரை எதிரிகள் வெட்டிய போது நான் சென்று தடுப்பதற்கு முயற்சிக்கவில்லை. சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். அப்போதே என்னையும், அ.சா.1 யையும் போலிசார் விசாரித்தார்கள். அ.சா.1 யை போலிசார் விசாரித்தபோது நான் பக்கத்தில் இருந்தேன். அ.சா.1 யை விசாரித்தபோது போலிசார் ஆயுதங்களை காட்டி விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

எனது வீட்டிற்கு மேற்குபுறம் காளியம்மன் கோவில் இருக்கிறது. அந்த கோவிலில் சாமி கும்பிடுவது சம்மந்தமாக எங்களது குடும்பத்தினருக்கும், எங்கள் ஊரை சேர்ந்த தச்சர்களுக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. அப்படி பிரச்சனை இருந்தது என்றாலும் அந்த பிரச்சனையில் இறந்துபோன தேசிங்கு பாலன் என்பவர் தச்சர்களுக்கு ஆதரவாக பேசிவந்தார் என்றாலும், அந்த பிரச்சனையின் காரணமாக எங்கள் குடும்பத்தினருக்கும், எங்கள் ஊரில் வசிக்கும் தச்சர்களுக்கும் இடையே விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

போலிசார் என்னை சம்பவ தினத்தன்றும், அதற்குபின்னிட்டும் 2, 3 முறை விசாரித்தார்கள். அப்படி விசாரித்தபோது முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். சம்பவம் நடந்ததிற்கு சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே 13 ஆம் எதிரி வங்குடி கிராமத்தை விட்டு வெளியேறி காட்டுமன்னார்கோவிலில் வசித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு 15 வருடங்களுக்கு முன்பாகவே 13 ஆம் எதிரி அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக வேலைக்கு சேர்ந்து சிதம்பரத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

எல்லா பிரச்சனைக்கும் 13 ஆம் எதிரி தான் காரணம் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேடியாக எதுவும் தெரியாது என்றாலும், நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில்

பார்த்திருந்தால் என் கணவரை காப்பாற்றுவதற்கு நான் முயற்சி செய்திருப்பேன் என்றாலும், நான் சம்பவ இடத்தில் இல்லாத காரணத்தினால் தான் அதுபோன்று முயற்சிசெய்யவில்லை என்றாலும் சரியல்ல.

13 ஆம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும், அவர் இரண்டாவது எதிரியின் சகோதரர் என்பதால் அவர்மீது பொய்யான புகார்கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**3 ஆம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அவர் மேற்கண்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.**

**எதிரிகள் 2, 7, 11, 14 முதல் 17 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.பி.சத்தியமூர்த்தி ஆஜர். இன்று வக்காலத்து தாக்கல் செய்திருக்கிறார். குறுக்கு விசாரணையை நிறுத்திவைக்க கோரி மனுதாக்கல் செய்து அது நிராகரிக்கப்பட்டது.**

**எதிரிகள் 1, 5, 9 மற்றும் 18 தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.